ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1649/3 - 2010 අප්‍රේල් 12 වැනි සඳුදා - 2010.04.12

*1649/3 ஆம் இலக்கம் - 2010 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 12 ஆந் திகதி திங்கட்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I)- பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

### நில அளவைச் சபை (பதிவு செய்து கொள்ளல்) பிரமாணங்களில் திருத்தம் - 2005

2005, நவெம்பர் 23ஆந் திகதிய 1420/20 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல் நியதிகளுக்கமைய, 2002 ஆம் ஆண்டின் 17ஆம் இலக்க, நில அளவைச் சட்டத்தின் பிரிவு 39 உடன் சேர்த்து வாசிக்கப்படுவதற்காக அச்சட்டத்தின் பிரிவு 65 இன் கீழ் என்னால் அங்கீகரிக்கப்பட்ட '2005 நில அளவைச் சபை (பதிவு) பிரமாணத்தின்' பந்தி 2 (2) கீழே குறிப்பிடப்பட்டுள்ள உபபந்திகள் உள்ளடங்கலாக பின்வருமாறு திருத்தப்பட்டுள்ளது என்பது இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பொது மக்களுக்கு இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

ஜோன்ஸ்ரன் சேவியர் பர்ணாந்து
காணி, காணி அபிவிருத்தி, குடியிருப்பு
போர் வீரர் நலனோம்புகை அமைச்சர்.

காணி, காணி அபிவிருத்தி, குடியிருப்பு போர் வீரர் நலனோம்புகை அமைச்சு,
கொழும்பு
2010, மார்ச்சு 05.

(உ) ஆயினும், அத்தகைய நில அளவையாளர் இலங்கை நிலஅளவைத் திணைக்களத்தில் வேலைக்கு அமர்த்தப்பட்டிருந்தால், மேற்படி உப பந்தி 'ஈ' இல் கூறப்பட்டவாறு அவர் பதிவுக் கட்டணம் செலுத்துவதிலிருந்து விலக்களிக்கப்படுவார்.

(ஊ) உப பந்தி 'உ' இல் குறிப்பிட்டவாறு பதிவுக்கட்டணக் கொடுப்பனவிலிருந்து விலக்களிக்கப்பட்ட நிலஅளவையாளர் ஒருவர், அவருடைய சேவை முடிவுற்றதன் பேரில் அல்லது மருத்துவக் காரணங்களால் ஓய்வு பெறுதல் தவிர்ந்த வேறேதேனும் காரணங்களிற்காக திணைக்களச் சேவையிலிருந்து நீங்கியிருந்தால் அல்லது நீக்கப்பட்டிருந்தால், அவர் மேலே உபபந்தி 'ஈ' இல் குறிப்பிடப்பட்டுள்ள கட்டணத் தொகையை நிலஅளவைச் சபைக்கு செலுத்தி பதிவுச் சான்றிதழைப் பெற வேண்டும்.

4-625